முதலாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சேலம்

நாள்: 01.04.2026 அ.வ.எண்.170/2022 வா.சா.1 – கண்ணன்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணையின் தொடர்ச்சி**

22) வா.சா.ஆ.1 , 2 புகார் மனு ஏற்புச் சான்றுகளுக்கான புகார் மனுக்களை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு எனது குடும்பத்தார் கொடுத்த புகார்கள் மீது நடைபெற்றதாக சொல்லும் காவல்நிலைய விசாரணை குறித்த விவரங்களையும் வழக்குரையிலோ, முதல் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. ஆகவே இவ்வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

23. முதல் விசாரணை பத்தி 6 முதல் 8–ல் கூறியுள்ள சம்பவங்கள் எதுவும் உண்மையில் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

24. 2ம் பிரதிவாதி குறித்து முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகள் தவறானவை என்றும், மிகைப்படுத்தி கூறியுள்ளோம் என்றும் அவர் வழக்கிற்கு தேவையற்ற தரப்பினர் என்றால் சரியல்ல.

25. முதல் விசாரணை 9, 10 பத்திகளில் கூறியுள்ளது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

26. நான் சொல்வது போல் ரூ.17,50,000/– யை 1ம் பிரதிவாதிக்கு கொடுக்க வேண்டுமென்று 1 முதல் 4 பிரதிவாதிகள் மிரட்டியதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அது போல் புகாரை வாபஸ் பெற வேண்டுமென்று எனது சகோதரியை மிரட்டினார்கள் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல.

27. எங்கள் குடும்பத்தார் கொடுத்த புகார்கள் பொய் புகார்கள் என்பதால் தான் அந்த புகார்கள் மீது மேல்நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

28. முதல் விசாரணை பத்தி 11ல் குறிப்பிட்டுள்ளது போல் என்னிடம் தொகை கேட்டு 1ம் பிரதிவாதியின் அறிவுறுத்தலின் பேரில் 4ம் பிரதிவாதி

மிரட்டியதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. அவ்வாறு மிரட்டியிருந்தால் உயர் அதிகாரிகளிடம் புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. நடவடிக்கை எடுக்காததால் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

29) 3, 4 பிரதிவாதிகளுக்கும், இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றும், வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல.

30. 1ம் பிரதிவாதிக்கு கொடுக்க வேண்டிய கடன் தொகைக்காக நான் கொடுத்த காசோலையின் பேரில் 1ம் பிரதிவாதி எனக்கு எதிராக தாக்கல் செய்த எஸ்டிசி.7977/2023 என்ற காசோலை மோசடி வழக்கு குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.5-ல் நிலுவையிலுள்ளது என்றும், காசோலை தொகையை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

31. 1ம் பிரதிவாதி அ.வ.எண்.134/2023 என்ற வழக்கை எனக்கு எதிராக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார்.

32. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல.